

தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 04.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA 1717/F/2024

திரு.சா.சங்கரன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி-635001. .. பொது அதிகார அமைப்பு

ஆணை-II

இவ்வாணையம் 09.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.பா.பிரகாஷ், அப்போதைய தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.V.கணேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் 04.11.2026 இன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் மூ.மூ.6265/2026/அ1, நாள் 26.10.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் ஒப்புகை அட்டையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.பா.பிரகாஷ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(1)- கீழ் அபராதம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 02.12.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 1717/F/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு:-

பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி-635001.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி-635001.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

மேல்முறையீட்டாளர்:-

திரு.சங்கரன்,
1/346A, மாளகுப்பம் கிராமம்,
மேல்கரடிகுறி அஞ்சல்,
கிருஷ்ணகிரி-635002.

Copy to file: KR/PA